# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

**2019 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 15 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி**

*(2019.11.19 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

## உண்ணாட்டரசிறை (திருத்தம்)

***2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

*நிதி அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 34.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## *சட்டப்பயன்பற்றிய கூற்று*

***வாசகம் 2*** : *இவ்வாசகம், (இதனகத்துப்பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, ஊழியத்திலிருந்தான தனியாளொருவரின் ஈட்டுகைகளையும் இலாபங்களையும் கணக்கிடும்போது ஒரு பணிக்கொடை நிதியத்துக்குத் தொழில்தருநர் ஒருவரினால் அளிக்கப்பட்ட உதவுதொகைகளுக்கு விலக்களிப்பதாகும்.*

***வாசகம் 3*** : *இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, எந்தவியாபாரங்கள் தொடர்பில் முதலீட்டு ஊக்குவிப்புகளும் தற்காலிகச் சலுகைகளும் அளிக்கப்படலாமோஅந்தவியாபாரங்களின் வகுதிகளை விசாலிப்பதாகும்.*

***வாசகம் 4*** : *இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, ஊழியர்சார்பில் தொழில்தருநரினால் செலுத்தப்பட்டவரிக்கு கழிப்பனவொன்றாக அனுமதிமறுப்பதாகும்.*

***வாசகம் 5*** : *இவ்வாசகம், தெளிவுபடுத்தும் நோக்கத்துக்காக முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவைத் திருத்துவதாகும்.*

***வாசகம் 6*** : *இவ்வாசகம், தெளிவுபடுத்தும் நோக்கத்துக்காக முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவைத் திருத்துவதாகும்.*

***வாசகம் 7*** : *இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறானபிரிவின் சட்டப்பயனானது, ஒரு கம்பெனியின் கழிக்கத்தக்க நிதிசார் செலவுத்தொகையைக் குறித்துரைப்பதாகும்.*

***வாசகம் 8*** : *இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறானபிரிவின் சட்டப்பயனானது, ஒரு முதலீட்டுச் சொத்தின் ஈட்டுகையிலிருந்தான ஏதேனும் நட்டத்தின் கழிப்பனவுக்கு அனுமதிமறுப்பதாகும்.*

***வாசகம் 9*** : *இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, ஒருநம்பிக்கைப்பொறுப்பு அல்லது கம்பெனி அதன் வரிமதிப்பீட்டாண்டை மாற்றுவதனை இயலச்செய்வதற்கு ஏற்பாடுசெய்வதாகும்.*

***வாசகம் 10*** : *இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 68 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, ஓர் அரச சார்பற்ற ஒழுங்கமைப்பு குறித்துரைக்கப்பட்ட மேலதிக வரியொன்றைச் செலுத்துவதனைத் தேவைப்படுத்துவதற்கு ஏற்பாடுசெய்வதாகும்.*

***வாசகம் 11*** : *இவ்வாசகம், தெளிவுபடுத்தும் நோக்கத்துக்காக முதன்மைச் சட்டவாக்கத்தின் 70 ஆம் பிரிவைத் திருத்துவதாகும்.*

***வாசகம் 12*** : *இவ்வாசகம், தெளிவுபடுத்தும் நோக்கத்துக்காக முதன்மைச் சட்டவாக்கத்தின் 84 ஆம் பிரிவைத் திருத்துவதாகும்.*

***வாசகம் 13*** : *இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 85 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, இயைபான கொடுப்பனவுகள் செய்யப்பட்டதனை உறுதிப்படுத்துகின்ற சான்றிதழொன்று முன்வைக்கப்படின், பிடித்துவைத்தல் வரிப்பொறுப்பிலிருந்து சேவைக் கட்டணங்களையும் ஒப்பந்தக் கொடுப்பனவுகளையும் தவிர்ப்பதாகும்.*

***வாசகம் 14*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 87 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, பிடித்துவைத்தல் சான்றிதழானது எக்காலப்பகுதியினுள் பிடித்துவைக்கப்பட்டவருக்குச் சேர்ப்பிக்கப்படுதல் வேண்டுமோ அக்காலப் பகுதியை நீடிப்பதாகும்.

***வாசகம் 15*** : இவ்வாசகம், தெளிவுபடுத்தும் நோக்கத்துக்காக முதன்மைச் சட்டவாக்கத்தின் 88 ஆம் பிரிவைத் திருத்துவதாகும்.

***வாசகம் 16*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 129 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்ட வாறான பிரிவின் சட்டப்பயனானது, தகவல் பற்றிய ஒரு விபரத்திரட்டை அல்லது வருடாந்தக் கூற்றொன்றை ஆளொருவர் கோப்பிடுவதனைத் தேவைப்படுத்துவதாகும்.

***வாசகம் 17*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 139 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, ஒரு மதிப்பீட்டுக்கெதிராக ஆட்சேபனையொன்று செய்யப்படும்போது ஒரு விபரத்திரட்டை அல்லது வருடாந்தக் கூற்றைக் கொடுத்துதவுவதனைத் தேவைப்படுத்துவதாகும்.

***வாசகம் 18*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 195 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, "கமத்தொழில் வியாபாரங்கள்" என்ற பதத்தின் வரை விலக்கணத்தை விசாலிப்பதாகும்.

***வாசகம் 19*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்துக்கான முதலாம் அட்டவணையைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது,-

(அ) ஏதேனும் மதுபான அல்லது புகையிலைத் தயாரிப்பை உற்பத்திசெய்வதில் ஈடுபட்டுள்ள வியாபாரங்களுக்கு இயைபான வருமானவரிப் பொறுப்பை வரையறுப்பதாகும்; அத்துடன்

(ஆ) அரசுரிமைப்பணக் கொடுப்பனவு தொடர்பாக வரிவீதமொன்றைக் குறித்துரைப்பதாகும்.

***வாசகம் 20*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்துக்கான இரண்டாம் அட்டவணையைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது,-

(அ) புதிய வியாபாரங்களில் மற்றும் ஏலவேயுள்ள வியாபாரமொன்றின் விசாலிப்பில் முதலீடு செய்கின்ற ஆட்களுக்கு அதிகரித்த மூலதன அனுமதிப்புகளை வழங்குவதற்கு ஏற்பாடு செய்வதாகும்; அத்துடன்

(ஆ) குறித்த சில ஊழிய வருமானங்களைப் பிடித்துவைத்தல் வரியிலிருந்து விலக்களிப்பதற்கு ஏற்பாடுசெய்வதாகும்.

***வாசகம் 21*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்துக்கான மூன்றாம் அட்டவணையைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, பின்வருவனவற்றின் மீது வரிவிலக்களிப்பை வழங்குவதாகும்:-

(அ) பிள்ளைகளுக்கு, வயோதிபருக்கு அல்லது அங்கவீன முற்றோருக்குப் பராமரிப்பை வழங்கும் தரும நிறுவனங்களுக்குத் திரளுகின்ற அல்லது பெறப்பட்டவட்டி;

(ஆ) சனாதிபதி நிதியத்திலிருந்து அல்லது தேசியப் பாதுகாப்புநிதியத்திலிருந்து எவரேனு மாளினால் அல்லது திரட்டு நிதியத்திலிருந்து அல்லது அரசாங்கத்தினூடாக ஒழுங்கேற்பாடு செய்யப்பட்ட ஏதேனும் கடனிலிருந்து ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனத்தினால் பெறப்பட்ட பணத்தொகையொன்று;

(இ) அரசாங்கத்தினால் அல்லது அதன் சார்பில் வழங்கப்பட்ட தங்கமுறிகளின்மீது ஒரு வதிவுள்ளவரினால் அல்லது வதிவற்றவரினால் சம்பாதிக்கப்பட்ட வருமானம்;

(ஈ) குறித்துரைக்கப்பட்ட சூழ்நிலைகளின்கீழ் குறித்தசில வதிவுள்ள கம்பெனிகளினாலும் குறித்துரைக்கப்பட்ட வியாபாரங்களில் ஈடுபட்டுள்ள வேறு கம்பெனிகளினாலும் செலுத்தப்பட்ட பங்கிலாபங்கள்.

**வாசகம் 22 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்துக்கான ஐந்தாம் அட்டவணையைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, தகைமையளிக்கும் கொடுப்பனவுகளினதும் நிவாரணங்களினதும் நோக்கெல்லையை விசாலிப்பதாகும்.

**வாசகம் 23 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்துக்கான ஐந்தாம் அட்டவணையைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, தற்காலிகச் சலுகைகளின் நோக்கெல்லையை விசாலிப்பதாகும்.

**வாசகம் 24 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்துக்குச் செய்யப்பட்ட குறித்தசில திருத்தங்களுக்குக் கடந்தகாலத்தையும் உள்ளடக்கும் பயனைக் கொடுப்பதற்கு ஏற்பாடுசெய்வதாகும்.

## உண்ணாட்டரசிறை

ச.வ.ஒ. 19/2018

### 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயர்.

**1**. இச்சட்டம், 2019ஆம் ஆண்டின் ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப் படலாம்.

2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 5ஆம் பிரிவைத் திருத்துதல்.

**2**. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 5ஆம் பிரிவு, அப்பிரிவின் (3)ஆம் உட்பிரிவில் இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியில், "(இ) சமமான நியதிகளின்மீது" என்னும் சொற்களுக்குப் பதிலாக "(இ)சமமான நியதிகளின்மீது ஒரே தரத்திலான சேவையிலுள்ள" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அவ்வுட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியில், "சகாய அல்லது சேமிப்பு நிதியத்தில் அல்லது சேமிப்பு சங்கத்தில்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "சகாய, பணிக்கொடை அல்லது சேமிப்பு நிதியத்தில் அல்லது சேமிப்பு சங்கத்தில்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

**3**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 6ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில், "இச்சட்டத்துக்கான இரண்டாம் அல்லது நான்காம் அட்டவணையின்மூலம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "இச்சட்டத்துக்கான இரண்டாம், நான்காம் அல்லது ஆறாம் அட்டவணையின்மூலம்' என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 6ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**4**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 10ஆம் பிரிவுஇத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 10ஆம் பிரிவைத் திருத்துதல்.*

(1) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் -

(அ) அப்பந்தியின் (v)ஆம் உட்பந்தியில், ''சகாய அல்லது சேமிப்பு நிதியமொன்றுக்கு'' என்னும் சொற்களுக்குப் பதிலாக "சகாய, பணிக்கொடை அல்லது சேமிப்பு நிதியமொன்றுக்கு" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(ஆ) அப்பந்தியின் (ix)ஆம் உட்பந்தியில், "உறப்பட்ட தொகைகள்; அல்லது" என்னும் சொற்களுக்குப் பதிலாக ''உறப்பட்ட தொகைகள்;'; என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(இ) அப்பந்தியின் (x)ஆம் உட்பந்தியில், 'வேறு அறவீடுகள்.' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''வேறு அறவீடுகள்;'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(ஈ) அப்பந்தியின் (x)ஆம் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன்மூலமும்:-

"(xi) ஊழியரின் சார்பில் தொழில் தருநரினால் செலுத்தப்பட்ட வரியின் மொத்தத் தொகை.";

(2) அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவில், ''அவ்வாளுக்கு அனுமதிக்கப்படுமிடத்து'' என்றும் சொற்களுக்குப் பதிலாக "அவ்வாளுக்கு அனுமதிக்கப்படுமிடத்து வரி பிடித்து வைக்கப்படாதவிடத்து அல்லது'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 14ஆம் பிரிவு, அப்பிரிவின் (3)ஆம் உட்பிரிவில், "(நான்காம் அட்டவணையின் பந்தி (3))." என்னும் சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக "(நான்காம் அட்டவணையின் பந்தி 3)." என்னும் சொற்களையும் எண்ணையும் இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 14ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**6**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 16ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 16ஆம் பிரிவைத் திருத்துதல்.*

(1) அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், "இச்சட்டத்துக்கான இரண்டாம் அல்லது நான்காம் அட்டவணையின்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக "இச்சட்டத்துக்கான இரண்டாம், நான்காம் அல்லது ஆறாம் அட்டவணையின்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(2) அப்பிரிவின் (4)ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலமும்:-

"(ஆ) இச்சட்டத்துக்கான இரண்டாம் அட்டவணை, நான்காம் அட்டவணை அல்லது ஆறாம் அட்டவணையின் ஏற்பாடுகளுக்கிணங்கக் கணிக்கப்படுகின்றனவாகும்.".

**7**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 18ஆம் பிரிவு, அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில், ''ஓர் உருவகத்தின் வருமானத்தைக் கணக்கிடுவதில்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக'' ஒரு கம்பெனியின் வருமானத்தைக் கணக்கிடுவதில்'' என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 18ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**8**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 19ஆம் பிரிவு, அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவில், ''வேறொரு முதலீட்டுச் சொத்தின் கையுதிர்ப்பின்மீதான ஏதேனும் நட்டத்தின்மூலம் குறைக்கப் படுதலாகாது.'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''ஏதேனும் நட்டத்தின்மூலம் குறைக்கப்படுதலாகாது.'' என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 19ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**9**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், ''அதன் வரிமதிப்பீட்டாண்டுக்கான'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''ஒரு மதிப்பீட்டாண்டாக அமைகின்ற பன்னிரெண்டு மாதகாலப் பகுதிக்கான'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில், ''ஒரு நம்பிக்கைப் பொறுப்பின் அல்லது கம்பெனியின் வரி மதிப்பீட்டாண்டிலான மாற்றம், அந்நம்பிக்கைப் பொறுப்பு அல்லது கம்பெனி அத்தியாயம் VIII இன்கீழ் தவணைப்பணங்களின்மூலமும் வரிமதிப்பீட்டின்மீதும் வரிசெலுத்தவேண்டிய காலத்தை மாற்றியமைப்பதனை விளைவித்தல் வேண்டும்.'' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக ''இரண்டாம் உட்பிரிவின்கீழ் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நம்பிக்கைப் பொறுப்பின் அல்லது கம்பெனியின் வரிமதிப்பீட்டாண்டிலான மாற்றம், அந்நம்பிக்கைப்பொறுப்பு அல்லது கம்பெனி அத்தியாயம் VIII இன்கீழ் தவணைப்பணங்களின் மூலமும் வரிமதிப்பீட்டின்மீதும் வரிசெலுத்தவேண்டிய காலத்தை மாற்றியமைப்பதனை விளைவித்தலாகாது.'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்.

**10**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 68ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "தொகைகளின் மூன்று சதவீதத்தின்மீதான மேலதிக வரியைச்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "தொகைகளின் மூன்று சதவீதத்திலிருந்தான மேலதிக வரியைச்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 68 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**11**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 70 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "பிரிவு 69 இன் (1) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "பிரிவு 69 இன் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 70 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**12**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 84 ஆம் பிரிவு, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியில், "செலுத்தப்பட்ட வட்டி; அல்லது" என்னும் சொற்களுக்குப் பதிலாக "செலுத்தப்பட்ட வட்டி;" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப் படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 84 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**13**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 85 ஆம் பிரிவு, அதன் (3) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 85 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

> "(ஈ) 2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவுச் சட்டத்தின் கீழ் பொருளாதாரச் சேவை விதிப்பனவுடன் விதிக்கப்படற்பாலனவான கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டுள்ளனவென உறுதிப்படுத்துகின்ற சான்றிதழொன்று எந்தச் சேவைக் கட்டணக் கொடுப்பனவுகள் மற்றும் ஒப்பந்தக் கொடுப்பனவுகள் தொடர்பில் பெறுகின்ற ஆளினால் முன்வைக்கப்படுகின்றதோ அந்தச் சேவைக் கட்டணக் கொடுப்பனவுகள் மற்றும் ஒப்பந்தக் கொடுப்பனவுகள்.".

**14.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 87ஆம் பிரிவு, அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், "அவ்வாண்டின் ஏப்பிறல் மாதத்தின் பதின்மூன்றாம் நாளுக்கு பிந்தாமல் அல்லது" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அடுத்துப்பின்வரும் ஆண்டின் ஏப்பிறல் முப்பதாம் நாளுக்குப் பிந்தாமல் அல்லது'' என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 87ஆம் பிரிவைத் திருத்துதல்.

**15.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 88 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

முதன்மைச் சட்டவாக்கத்தின் 88ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில், "84 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தி" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "84 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தி'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்;

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில், "(3) பிரிவு 84 இன் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்'' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக ''(3) பிரிவு 84 இன் (3) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்'' என்னும் சொற்களையும் எண்களையும்இடுவதன் மூலமும்.

**16.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 129 ஆம் பிரிவு,அப்பிரிவில் ''விபரத்திரட்டு ஒன்றை கோப்பிடுவதற்கு'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''விபரத்திரட்டு ஒன்றை அல்லது வருடாந்தக்கூற்று ஒன்றைக் கோப்பிடுவதற்கு" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 129ஆம் பிரிவைத் திருத்துதல்.

**17.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 139ஆம் பிரிவு, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டுஅதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

முதன்மைச் சட்டவாக்கத்தின் 139ஆம் பிரிவைத் திருத்துதல்.

''(3) வேண்டுகோளானது, செய்வதற்குத் தேவைப்படுத்தப் பட்ட விபரத்திரட்டொன்று அல்லது வருடாந்தக் கூற்றொன்று

இல்லாது செய்யப்பட்டுள்ள வரிமதிப்பீடொன்றுக்கெதிரான ஆட்சேபனையொன்றாக இருக்குமிடத்து, ஆட்சேபனை தொடர்பான வேண்டுகோள் பற்றிய அறிவித்தல், முறையாகச் செய்யப்பட்ட, விடயத்துக்கேற்ப, விபரத்திரட்டொன்றுடன் அல்லது வருடாந்தக் கூற்றொன்றுடன் சேர்த்து அனுப்பப்படுதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 195ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**18.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 195ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவிலுள்ள "கமத்தொழில் வியாபாரம்" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்துக்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலம் இத்தாற் றிருத்தப்படுகின்றது:-

" "கமத்தொழில் வியாபாரம்" என்பது, கமத்தொழில், வீட்டு வேளாண்மை அல்லது ஏதேனும் விலங்கு விளைபொருளை உற்பத்திசெய்யும் வியாபாரம் எனப் பொருள்படுவதோடுபின்வருவனவற்றையும் உள்ளடக்கும்:-

(அ) அத்தகைய கமத்தொழில், வீட்டு வேளாண்மை அல்லது ஏதேனும் விலங்கு விளைபொருளைச் சந்தைக்காக ஆயத்தஞ்செய்யும் நோக்கத்துக்காகத் துப்புரவாக்குதல், தகைநிலை அளவிடுதல், பிரித்தல், தரப்படுத்தல், குளிரூட்டுதல், உலர்த்துதல், பொதியிடுதல், வெட்டுதல் அல்லது தகரத்திலடைத்தல் என்பவற்றுக்கான பொறுப்பு முயற்சி; அத்துடன்

(ஆ) கால்நடை அல்லது கோழி வளர்ப்பு நோக்கத்துக்கானவொரு பொறுப்புமுயற்சி.".

(2) பங்கிலாபம் என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தில் (அ) என்னும் பந்தியில், "பங்கை திரும்ப வாங்குவதில் " என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பங்கை திரும்ப வாங்குவதில்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்ட வாக்கத்துக்கான முதலாம் அட்டவணையைத் திருத்துதல்.

**19**. முதன்மைச் சட்டவாக்கத்துக்கான முதலாம் அட்டவணை இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வட்டவணையின் 1 ஆம் பந்தியில் –

(அ) அப்பந்தியின் (3) ஆம் உட்பந்தியில் –

(i) "உட்பந்தி (2) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட" என்னும் சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக "உட்பந்தி (2) இன் (ஆ) என்னும் விடயத்தில் குறிப்பீடு செய்யப்பட்ட" என்னும் சொற்களையும் எண்ணையும் இடுவதன் மூலமும்;

(ii) அவ்வுட்பந்தியின் (இ) என்னும் விடயத்தில், ''பெறப்பட்ட தொகை;'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''பெறப்பட்ட தொகை; அத்துடன்'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(iii) அவ்வுட்பந்தியின் (ஈ) மற்றும் (உ) என்னும் விடயங்களை நீக்கிவிடுவதன் மூலமும்; அத்துடன்

(iv) அவ்வுட்பந்தியின் (ஊ) என்னும் விடயத்தை அதன் (ஈ) என்னும் விடயமாக மீள எழுத்திடுவதன்மூலமும்;

(ஆ) அப்பந்தியின் (4) ஆம் உட்பந்தியில், ''மதுபானம் அத்துடன் அல்லது புகையிலை'' என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஏதேனும் மதுபான அல்லது புகையிலைத் தயாரிப்பை உற்பத்தி செய்தலும் மற்றும் விற்பனைசெய்தலும் அல்லது இறக்குமதி செய்தலும் மற்றும் விற்பனைசெய்தலும்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

(2) அவ்வட்டவணையின் 4 ஆம் பந்தியின் (3) ஆம் உட்பந்தியின் (iii) ஆம் விடயத்தில், ''முழுமொத்த வருமானத்தின் அடிப்படையின் மீது'' என்னும் சொற்களுக்குப் பதிலாக "வியாபாரத்தின் (முதலீட்டு

வருமானம் தவிர்ந்த) முழுமொத்த வருமானத்தின் அடிப்படையின் மீது'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(3) அவ்வட்டவணையின் 8 ஆம் பந்தியின் தலைப்பில் ''சகாய அல்லது ஓய்வூதிய நிதியங்கள்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''சகாய, ஓய்வூதிய அல்லது பணிக்கொடை நிதியங்கள்'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(4) அவ்வட்டவணையின் 10 ஆம் பந்தியின் (1)(ஆ) என்னும் உட்பந்தியில் -

(அ) அவ்வுட்பந்தியின் (iii) ஆம் விடயத்தில், ''வதிவிட ஆளொருவருக்கு செலுத்தப்பட்ட வாடகை விடயத்தில் - 10%, அத்துடன்'' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக ''வாடகையானது மாதமொன்றுக்கு 50,000 ரூபாவை அல்லது வரிமதிப்பீட்டாண்டொன்றுக்கு 500,000 ரூபாவை விஞ்சினால் வதிவுள்ள ஆளொருவருக்குச் செலுத்தப்பட்ட வாடகையின் விடயத்தில் -10%'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்;

(ஆ) அவ்வுட்பந்தியின் (iii) ஆம் விடயத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய விடயத்தை உட்புகுத்துவதன் மூலமும்:-

''(iv) வதிவுள்ள ஆளொருவருக்குச் செலுத்தப்பட்ட அரசுரிமைப்பணத்தின் விடயத்தில் - கொடுப்பனவானது மாதமொன்றுக்கு 50,000 ரூபாவை அல்லது வரிமதிப்பீட்டாண்டொன்றுக்கு 500,000 ரூபாவை விஞ்சினால் - 14%; அத்துடன்''; அத்துடன்

(இ) அவ்வுட்பந்தியின் (iv) ஆம் விடயத்தை அதன் (v) ஆம் விடயமாக மீள இலக்கமிடுவதன்மூலமும்.

**20**. முதன்மைச் சட்டவாக்கத்துக்கான இரண்டாம் அட்டவணை இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:- முதன்மைச் சட்டவாக் கத்துக்கான இரண்டாம் அட்ட வணையைத் திருத்துதல்.

(1) அவ்வட்டவணையின் 1ஆம் பந்தியில், (1)ஆம் உட்பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பந்தியை இடுவதன்மூலமும்:-

"(1) இப்பந்திக்கிணங்கக் கணிப்பீடு செய்யப்பட்ட, அதிகரிக்கப்பட்ட மூலதன அனுமதிப்புகள் பின்வருவோருக்கு வழங்கப்படுதல் வேண்டும்:-

(அ) நான்காம் அட்டவணையின் கீழ் கணிப்பீடு செய்யப்பட்ட மூலதன அனுமதிப்புக்களுடன் சேர்த்து மேலதிகமாக, ஒரு வரிமதிப்பீட்டாண்டின் போது, (ஏற்கனவே இருந்த வியாபாரத்தின் விஸ்தரிப்பு தவிர) இலங்கையில் முதலீடு செய்கின்ற ஆளொருவருக்கு;

(ஆ) நான்காம் அட்டவணையின் கீழ் கணிப்பீடு செய்யப்பட்ட மூலதன அனுமதிப்புக்களுக்குப் பதிலாக, ஒரு வரிமதிப்பீட்டாண்டின் போது, ஏற்கனவே இருந்த வியாபாரத்தின் விஸ்தரிப்புக்காக இலங்கையில் முதலீடுசெய்கின்ற ஆளொருவருக்கு.".

(2) அவ்வட்டவணையின் 3ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும்:-

**"பிடித்துவைத்தல் வரியிலிருந்து ஊழிய வருமானத்துக்கு விலக்களித்தல்**

3. முதலாம் அட்டவணையில் எது எவ்வாறிருப்பினும், வெளிநாட்டவராகவுள்ள ஊழியரொருவருக்குத் தொழில்தருநரொருவரினால் செய்யப்பட்ட கொடுப்பன வொன்றிலிருந்து பிடித்துவைக்கப்படவேண்டிய

வரிவீதம், அக்கொடுப்பனவைச் செய்கின்ற கம்பெனியானது இலங்கையில் அருவச்சொத்துக்கள் அல்லாத தேய்மானத்திற்குட்படற்பாலனவான சொத்துக்களின்மீது 1,000 மில்லியன் ஐஅ டொலருக்கு மேற்பட்ட தொகையை உற்றிருந்தால் அல்லது 1 ஆம் பந்தியின் (5) ஆம் உட்பந்தியின்கீழ் அதிரிக்கப்பட்ட மூலதன அனுமதிப்பொன்றுக்கு உரித்துடையதாக விருந்தால் மற்றும் அக்கொடுப்பனவு, இவ்வட்ட வணையின்கீழான அதிகரிக்கப்பட்ட மூலதன அனுமதிப்புக்களினால் பாதுகாக்கப்பட்ட இலாபங் களிலிருந்து செய்யப்பட்டால், வெளிநாட்டவராகவுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை இருபதை விஞ்சாதிருக்கு மிடத்து, பூச்சியமாகவிருத்தல் வேண்டும்.

*முதன்மைச் சட்டவாக்கத்துக்கான மூன்றாம் அட்டவணையைத் திருத்துதல்.*

**21.** முதன்மைச் சட்டவாக்கத்துக்கான மூன்றாம் அட்டவணை இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வட்டவணையின் (அ) என்னும் பந்தியில், அப்பந்தியின் (vii) ஆம் உட்பந்தியை உடனடுத்துப் பின்வருவதனைச் சேர்ப்பதன்மூலமும்:-

"ஆயின், எவ்வாறாயினும், இப்பந்தியின்கீழான விலக்களிப்பு பின்வருவனவற்றுக்கு ஏற்புடையதாத லாகாது:-

i. உட்பந்தி (i) இல் மற்றும் உட்பந்தி (ii) இல் குறித்துரைக்கப்பட்ட நிறுவனங்கள்தவிர்ந்த ஏதேனும் நிறுவனத்தின் பங்கிலாபங்களி லிருந்தான அல்லது வட்டியிலிருந்தான ஈட்டுகைகளும் இலாபங்களும்; அத்துடன்

ii. உட்பந்தி (i) இல் மற்றும் உட்பந்தி (ii) இல் குறித்துரைக்கப்பட்ட நிறுவனங்களின் விடயத்தில், 10ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (xi)ஆம் உட்பந்தியின்கீழ் அனுமதிக்கப்படத்தகாத ஏதேனும் தொகை;";

(2) அவ்வட்டவணையின் (ஈ) என்னும் பந்தியின் (ii) ஆம் உட்பந்தியில், ''ஆணையாளர் தலைமையதிபதியால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு சகாய நிதியம்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''ஆணையாளர் தலைமை யதிபதியால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு சகாய நிதியம் அல்லது ஒழுங்குபடுத்தப்பட்ட ஒரு சகாய நிதியம்'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(3) அவ்வட்டவணையின் (ஐ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

''(ஐ) (i) தரும நிறுவனமொன்றிற்குத் திரளுகின்ற அல்லது அதனால் பெறப்பட்ட வட்டியானது அதனால் பேணப்பட்ட இல்லமொன்றில் சிறுவர்களுக்கு, வயோதிபருக்கு அல்லது அங்கவீனமுற்றவர்களுக்குப் பராமரிப்பு வழங்கும் நோக்கத்துக்காக மட்டும் பயன் படுத்தப்படுகின்றதென ஆணையாளர் தலைமையதிபதியின் திருப்திக்கு எண்பிக் கப்படுமிடத்து அத்தகைய வட்டி;

(ii) இலங்கைக்கு வெளியேயுள்ள எவரேனு மாளினால் இலங்கையிலுள்ள எவரேனு மாளுக்கு அல்லது இலங்கை அரசாங்கத்துக்கு வழங்கப்பட்ட ஏதேனும் கடனின்மீது, இலங்கையிலுள்ள அதன் கொளிக் கம்பெனிக்கு அல்லது ஒரு துணைநிலைக் கம்பெனிக்கு வழங்கப்பட்ட ஏதேனும் கடனின்மீது தவிர, அத்தகைய ஆளுக்குத் திரளுகின்ற அல்லது அவரினாற் பெறப்பட்ட வட்டி;

(iii) *2019, யூலை 1 ஆந் தேதியிலிருந்து தொடங்குகின்ற ஐந்தாண்டுக் காலப்பகுதிக்காக, இலங்கை மத்திய வங்கியின் அங்கீகாரத்துடன், ஏதேனும் வர்த்தக வங்கியில் அல்லது ஏதேனும் விசேட வங்கியில் எவரேனும் ஆளினால் அல்லது அவரது சார்பில் திறக்கப்பட்ட ஏதேனும் வெளிநாட்டு நாணயக்கணக்கில் வெளிநாட்டு நாணயத்தில் அவரது வரவுக்கிருக்கும் பணங்களின்மீது அவருக்குத் திரளுகின்ற அல்லது அவரினாற் பெறப்பட்ட வட்டி;*

(iv) *பொதுமக்களிடமிருந்து அல்லது 1972ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கருத்துக்குட்பட்ட ஏதேனும் பதிவுசெய்யப்பட்ட சங்கத்திடமிருந்து வைப்புக்களை ஏற்றுக்கொள்வதற்கு இலங்கை மத்திய வங்கியினால் அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் நிதிநிறுவனத்திற் பேணப்பட்ட ஏதேனும் வைப்பிலிருந்து, மாதமொன்றுக்கு ஐயாயிரம் ரூபாவரை, இலங்கைப் பிரசையொருவராகவுள்ளவரும் இலங்கையில் வதிபவரும் வரிமதிப் பீட்டாண்டின் முதலாவது நாளன்று 18 வயதுக்குக் குறைந்தவராகவுள்ளவருமான எவரேனும் சிறுவருக்குத் திரளுகின்ற அல்லது அவரினாற் பெறப்பட்ட வட்டி;";*

*(4) அவ்வட்டவணையின் (ஓ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-*

"(ஓ) (i) *1978 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, சனாதிபதி நிதியச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட சனாதிபதி நிதியத்திலிருந்து அல்லது*

*1985 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, தேசிய பாதுகாப்பு நிதியச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட தேசிய பாதுகாப்பு நிதியத்திலிருந்து எவரேனுமாளினாற் பெறப்பட்ட ஏதேனும் பணத்தொகை;*

(ii) *திரட்டு நிதியத்திலிருந்து பாராளுமன்றத்தினால் வாக்களிக்கப்பட்ட நிதிகளிலிருந்து அல்லது அரசாங்கத்தினூடாக ஒழுங்கேற்பாடு செய்யப்பட்ட ஏதேனும் கடனிலிருந்து ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனத்தினாற் பெறப்பட்ட எதேனும் பணத்தொகை;";*

(5) *அவ்வட்டவணையின் (ஔ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-*

*"(ஔ) இலங்கை அரசாங்கத்தினால் அல்லது அதன் சார்பில் வழங்கப்பட்டதும்–*

(i) *வெளிநாட்டு அல்லது உள்நாட்டு நாணயத்தில் குறிக்கப்பட்டதுமான ஏதேனும் தங்க முறியின்மீது வட்டி, கழிப்பனவு அல்லது ஏதேனும் ஈட்டுகையின் தேறிப்பெறுகை என்றவகையாக இலங்கையின் நிரந்தரத் தாபனமொன்றல்லாத எவரேனும் வதிவற்ற ஆளினால் சம்பாதிக்கப்பட்ட ஏதேனும் வருமானம்;*

(ii) *இலங்கை அபிவிருத்தி முறிகளுட்பட, ஏதேனும் தங்க முறியின்மீது, விடயத்துக்கேற்ப, செலுத்தப்பட்ட அல்லது அனுமதிக்கப்பட்ட வட்டி அல்லது கழிப்பனவு என்றவகையாக எவரேனும் வதிவுள்ள ஆளினால் சம்பாதிக்கப்பட்ட ஏதேனும் வருமானம்;";*

(6) அவ்வட்டவணையின் (ச) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

“(ச) (i) ஒரு வதிவுள்ள கம்பெனியினால் அல்லது 84 ஆம் பிரிவின்கீழ் பிடித்துவைத்தலுக்கு அமைந்தாதகவுள்ள வேறொரு வதிவுள்ள கம்பெனியினால் பெறப்பட்ட வேறொரு பங்கிலாபத்திற்கு ஒரு பங்கிலாபக் கொடுப்பனவு ஏற்றிக்கூறப்படற்பாலதாக வுள்ள அல்லது அதிலிருந்து திரண்ட அளவுக்கு உறுப்பினரொருவருக்கு அந்த வதிவுள்ள கம்பெனியினால் செலுத்தப்பட்ட பங்கிலாபமொன்று;

(ii) 2012 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, நிதிச்சட்டத்தின் பாகம் IV இன் ஏற்பாடுகளுக்கிணங்கப் பின்வரும் வியாபாரங்களுள் ஏதேனும் ஒன்றில் அல்லது அதற்கு மேற்பட்டவற்றில் ஈடுபட்டுள்ளதும் 1978ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை முதலீட்டுச் சபையுடன் உடன்படிக்கையொன்றைச் செய்துகொண்டுள்ளதுமான ஏதேனும் கம்பெனியினால் செலுத்தப்பட்ட பங்கிலாபமொன்று:-

(iiஅ) இறக்குமதி, சிறிய செய்முறைப் படுத்துகை மற்றும் மீள் ஏற்றுமதியை உட்படுத்துகின்ற துறைமுகக் களஞ்சியத் தொழில்;

(iiஆ) பண்டங்கள் ஒரு நாட்டிலிருந்து பெறுகை செய்யப்பட்டு அல்லது ஒரு

நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டு அவற்றை இலங்கைக்குக் கொண்டு வராமல் வேறொரு நாட்டுக்குக் கப்பலேற்ற முடியுமாகவுள்ள கரை கடந்த வியாபாரம்;

(iiஇ) வெளிநாட்டிலுள்ள வாடிக்கை யாளர்களுக்கு முகப்பு முனைச் சேவைகளை வழங்குதல்;

(iiஈ) நிதிசார் வழங்கற் சங்கிலியையும் உண்டியலிடும் தொழிற்பாடுகளையும் முகாமைசெய்வதற்காகத் தலைமை வாங்குநர்களின் தலைமையலுவலகத் தொழிற்பாடுகள்;

(iiஉ) இலங்கையில் சுங்கப் பண்டகசாலை அல்லது பல்நாட்டுத் திரட்டுகை உட்படஏற்பாட்டியல்சார் சேவைகள்;".

*முதன்மைச் சட்டவாக் கத்துக்கான ஐந்தாம் அட்டவணையைத் திருத்துதல்.*

**22**. முதன்மைச் சட்டவாக்கத்துக்கான ஐந்தாம் அட்டவணை இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வட்டவணையின் 1 ஆம் பந்தியில் –

(அ) அப்பந்தியின் (அ) என்னும் உட்பந்தியின் (iiஅ) என்னும் விடயத்தில், ''வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக "வரிமதிப்பிடற்பாலதான வருமானத்தின்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஆ) அப்பந்தியின் (அ) என்னும் உட்பந்தியின் (iiஆ) என்னும் விடயத்தில், ''வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''வரிமதிப்பிடற்பாலதான வருமானத்தின்'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(இ) அப்பந்தியின் (இ) என்னும் உட்பந்தியில், ''சனாதிபதி நிதியத்திற்கு அனுப்பப்பட்ட இலாபங்கள்.'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''திரட்டு நிதியத்துக்கு அல்லது 1978 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, சனாதிபதி நிதியச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட சனாதிபதி நிதியத்துக்குச் செலுத்தப்பட்ட ஏதேனும் பணத்தொகை;'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்.

(2) அவ்வட்டவணையின் 2 ஆம் பந்தியின் (உ) என்னும் உட்பந்தியில், "வெளிநாட்டு நாணயத்தில் இலங்கையில் சம்பாதிக்கப்பட்ட" என்னும் சொற்களுக்குப் பதிலாக "வெளிநாட்டு நாணயத்தில் சம்பாதிக்கப்பட்டு ஒரு வங்கியினூடாக இலங்கைக்கு அனுப்பப்பட்ட" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்துக்கான ஆறாம் அட்டவணையைத் திருத்துதல்.

**23.** முதன்மைச் சட்டவாக்கத்துக்கான ஆறாம் அட்டவணை இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வட்டவணையின் 1 ஆம் பந்தியில், அப்பந்தியின் (1) ஆம் உட்பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலமும்:-

''(1) இப்பந்திக்கிணங்கக் கணிப்பீடு செய்யப் பட்டவையும், (4) ஆம் உட்பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்டவையுமான தேய்மானத்திற்குட்படற் பாலனவான சொத்துக்களின்மீது அதிகரிக்கப்பட்ட மூலதன அனுமதிப்புக்கள் பின்வருவோருக்கு வழங்கப்படுதல் வேண்டும்:-

(அ) நான்காம் அட்டவணையின்கீழ் கணிப்பீடு செய்யப்பட்ட மூலதன அனுமதிப்புக்களுடன் சேர்த்து மேலதிகமாக, ஒரு வரிமதிப் பீட்டாண்டின் போது, (ஏற்கனவே இருந்த வியாபாரத்தின் விஸ்தரிப்பு தவிர) இலங்கை யில் முதலீடு செய்கின்ற ஆளொருவருக்கு;

(ஆ) நான்காம் அட்டவணையின்கீழ் கணிப்பீடு செய்யப்பட்ட மூலதன அனுமதிப்புக்களுக்குப் பதிலாக, ஒரு வரிமதிப்பீட்டாண்டின்போது, ஏற்கனவே இருந்த வியாபாரத்தின் விஸ்தரிப்புக்காக இலங்கையில் முதலீடு செய்கின்ற ஆளொருவருக்கு.".

(2) அவ்வட்டவணையின் 5 ஆம் பந்தியின் (1) ஆம் உட்பந்தியில் -

(அ) அவ்வுட்பந்தியின் (அ) என்னும் விடயத்தில், ''வியாபாரமொன்றை நடாத்துகின்ற விடத்தும்,'' என்னும் சொற்களுக்குப் பதிலாக "வியாபாரமொன்றை நடாத்துகின்றவிடத்தும்; அத்துடன்'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஆ) அவ்வுட்பந்தியின் (ஆ) என்னும் விடயத்தை நீக்கிவிடுவதன் மூலமும்; அத்துடன்

(இ) அவ்வுட்பந்தியின் (இ) என்னும் விடயத்தை, அதன் (ஆ) என்னும் விடயமாக மீள எழுத்திடுவதன்மூலமும்.

கடந்த காலத்தையும் உள்ளடக்கும் பயன்.

**24**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவுக்கு இச்சட்டத்தின் 9 ஆம் பிரிவினால் செய்யப்பட்ட திருத்தங்களும் முதன்மைச் சட்டவாக்கத்துக்கான மூன்றாம் அட்டவணையின் பந்தி (ஐ)(ii) மற்றும் (ஔ) என்பவற்றுக்கு இச்சட்டத்தின் 21ஆம் பிரிவினால் செய்யப்பட்ட திருத்தமும், எல்லா நோக்கங்களுக் காகவும், 2018, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று வலுவுக்கு வந்துள்ளனவாகக் கருதப்படுதல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**25**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.